# மஸ்ஜிட் இந்தியாவில் மீண்டும் மக்கள் கூட்டம்

**கோலாலம்பூர், ஜன.2-**

**தலைநகரிலுள்ள ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் பூமிக்கடியில் காணாமல் போன சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், அது மீண்டும் திறக்கப்பட்டதும் அங்கு மக்கள் கூடத் தொடங்கினர்.**

அங்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டு வந்த மறுசீரமைப்புப் பணிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று புத்தாண்டை முன்னிட்டு பொது விடுமுறை என்பதால் அங்கு அதிகமான மக்களைக் காண முடிந்தது. உள்நாட்டவர் கள் உட்பட வெளிநாட்டு சுற்றுப் பயணிகளையும் அங்கு காண முடிந்தது.

அங்கு வந்த அதிகமான மக்கள் இந்திய மாது புதையுண்ட பகுதியில் நின்று படம் பிடித்துக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

கடந்த 23.8.2024ஆம் தேதி தலைநகர் ஜாலான் மஸ்ஜித் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த விஜயலட்சுமி (வயது 48) என்ற மாது உயிரிழந்தார்.

அவரின் உடலைத் தேடும் நடவடிக்கை ஒன்பது நாட்களாக மேற்கொள்ளப்பட்ட வேளையில், அவரின் உடலைத் தேடும் நடவடிக்கை நிறுத்தப்படுவதாக கடந்த 31.8.2024ஆம் தேதி பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறியிருந்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்குள்ள மைடின் பேரங்காடி வரை சுமார் 100 மீட்டர் தூரம் வரை தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.





அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள் கால அட்டவணையை விட முன்கூட்டியே முடிவடைந்து விட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

உண்மையில் அதன் சீரமைப்புப் பணிகள் அடுத்தாண்டு பிப்ரவரி மாதம்தான் முடிவடைய வேண்டும் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

கோலாலம்பூர் மாநகரம் மக்களுக்கு பாதுகாப்பான ஓர் இடமாக இருப்பதை கோலாலம் பூர் மாநகர் மன்றம் உறுதிப்படுத் தும் எனவும் அது தனது அறிக்கையில் உறுதி கூறியது.

மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவம் தொடர்பான அறிக்கை அடுத்தாண்டு அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும். அந்த அறிக்கை பின்னர் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் அது தனது அறிக்கையில் கூறியது.

தலைநகரின் வேறு பகுதிகளில் மண் உள்வாங்கிய சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்தால் பொதுமக்கள் அதுகுறித்து 03-40106337 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு அது கேட்டுக் கொண்டது.